**பத்திரிக்கை வெளியீடு**
*Reserve Bank of India*

இந்திய ரிசர்வ் வங்கி
வெப்சைட் Website: www.rbi.org.in
இ மெயில் Email: helpdoc@rbi.org.in

தகவல் தொழில் நுட்பத்துறை, மைய அலுவலகம், எஸ்.பி.எஸ் மார்க், மும்பை 400001
DEPARTMENT OF COMMUNICATION, Central Office, S.B.S. Marg, Mumbai – 400001
போன் Phone: 91 22 2266 0502

**மார்ச் 09, 2018**

**இந்திய ரிசர்வ் வங்கி, வெளி வல்லுநர்கள் நிகழ்ச்சியை அறிவிக்கிறது**

இந்திய ரிசர்வ் வங்கி வெளிநாட்டு மத்திய வங்கிகள், சர்வதேச நிறுவனங்கள், வெளிநாட்டு பல்கலைக் கழகங்கள் மற்றும் பிற வெளிநாட்டு ஆராய்ச்சி அமைப்புகளிலிருந்து நிபுணர்கள் கொண்ட வெளிவல்லுநர் நிகழ்ச்சியை அறிவித்துள்ளது. நிகழ்ச்சி நிரலின் முக்கிய அம்சங்கள் இணைக்கப்பட்டுள்ளது.

ஆர்வமுள்ள நிபுணர்கள் மின்னஞ்சல் வழியாக தங்கள் தகுதிக் குறிப்புகள் (Curriculum Vitae-CV) மற்றும் ஆராய்ச்சி முன்மொழிவுகளுடன் விண்ணப்பிக்கலாம்.

(ஜோஸ் J. காட்டூர்)
தலைமைப் பொதுமேலாளர்

**பத்திரிக்கை வெளியீடு –2017-2018/2413**

இணைப்பு

**இந்திய ரிசர்வ் வங்கியின் வெளி வல்லுநர்கள் நிகழ்ச்சி நிரல்**

i. அந்த வெளி வல்லுநர் பொருளாதாரம் அல்லது நிதித் துறையில் அங்கீகாரம் பெற்ற வெளிநாட்டுப் பல்கலைக்கழகத்திலிருந்து பி.எச்.டி பட்டம் பெற்றிருக்கவேண்டும். மற்றும் குறைந்தபட்சம் வெளிநாட்டில் மூன்று வருட ஆராய்ச்சியைக் கொண்டும் வெளியிட்ட ஆய்வானது பிரபலமான பத்திரிக்கைகளில் வெளியிடப்பட்டிருக்கவும் வேண்டும்.

ii. வரவிருக்கும் வெளி வல்லுநர், விரிவான தகுதிக் குறிப்போடு (Curriculum Vitae-CV) 1000 வார்த்தைகளுக்கு மிகாமல் ஓர் ஆராய்ச்சி முன் மொழிவையும் அனுப்பவேண்டும்.

iii. தகுதிக் குறிப்பின் (Curriculum Vitae-CV) மதிப்பீடு, சிபாரிசுக் கடிதம் மற்றும் ஆராய்ச்சித் திட்டத்தின் தரம் ஆகியவைகளின் கூட்டு அடிப்படையிலேயே தேர்வு செய்யப்படும். தேர்வு பட்டியலிடப்பட்ட வெளி வல்லுநர்கள் தேவைப்பட்டால் காணொலி/தொலைபேசி மூலமாக நேர்காணல் செய்யப்படலாம்.

iv. தேர்ந்தெடுக்கப்பட்ட வெளி வல்லுநர் இந்திய ரிசர்வ் வங்கியின் மத்திய அலுவலகத்தில் அளவுப் பொருளாதாரம் மற்றும் பகுப்பாய்வு, பணவியல், வங்கி / நிதியியல் இடைநிலை, நிதி ஸ்திரத்தன்மை, அத்துடன் இந்தியாவுக்குத் தொடர்புடைய மேக்ரோ மற்றும் கட்டமைப்புச் சிக்கல்கள், சந்தைப் பொருளாதாரங்களில் ஆகிய துறைகளில் உள்ள ஆய்வாளர்களுடனோ அல்லது தனியாகவோ அவருடைய திட்டத்தை வெற்றிகரமாக முடிக்க முடியும்.

v. இந்திய ரிசர்வ் வங்கி, வந்து திரும்புவதற்கான எகானமி வகுப்பு விமானக் கட்டணம், மும்பையில் பொருத்தமான தங்குமிட வசதி, தின வாழ்க்கைக்கான செலவுப்படி, திட்டத்தை வெற்றிகரமாக முடித்தபின், ஒரு மதிப்பூதியத்தையும் வழங்கும்.

vi. வெளிவல்லுநர் அவருடைய திட்டத்தை 2 முதல் 3 மாதங்களில் பூர்த்தி செய்யவேண்டும். மும்பையில் முழு நேரமும் தங்க அவசியமில்லை. அவர்/அவள் -ருக்குக் கொடுத்த பாதி கால அளவில் 2 தடவைக்குமேல் இங்கு தங்க அவசியமில்லை.

vii. இந்தத் திட்டம் முடிந்த பிறகு, வெளிவல்லுநர், இந்திய ரிசர்வ் வங்கியின் ஒரு கருத்தரங்கில் பங்கேற்கவேண்டும். இந்த அறிக்கை இந்திய ரிசர்வ் வங்கியின் பணித்தாளில் வெளியிடப்படும் மற்றும் இறுதியாக இந்திய ரிசர்வ் வங்கியின் நிகழ்வு தாள்களிலும்வெளியிடப்படும்.

viii. ஒரு நிதியாண்டில் (ஜூலை – ஜூன்) நான்கு வெளிநல்லுநர்களின் வருகை வரவேற்கப்படலாம். அல்லது அதன் விருப்பப்படி, எந்த வருடமாவது வரும் வெளிநல்லுநர்களின் எண்ணிக்கை மாறுபடலாம்.

ix. இந்திய ரிசர்வ் வங்கியின் வெளி வல்லுநர்களின் திட்டத்திற்கான விண்ணப்பம் ஆண்டு முழுவதும் பெறப்படும். மற்றும் அதற்கான கால அட்டவணை பரஸ்பர வசதியைக் கருதி திட்டமிடப்படலாம். தகுதிக் குறிப்பு, ஆராய்ச்சித் திட்டத்துடன் கூடிய விண்ணப்பம் இ-மெயில் மூலம் அனுப்பலாம்.

*****